# ஆண்டின் பொதுக்காலம் 32 ஆம் வாரம்

*திருவழிப்பாட்டு ஆண்டு* B *(08-11-2015)*

இன்றைய நற்செய்தி வாசகங்கள்

1அரசர் 17: 10-16

எபிரே 9: 24-28

மாற். 12: 41-44

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவின் அன்புக்கும் அரவணைப்புக்கும் உரிய அன்பு மக்களே தமது நிறையன்பால் நம்மை வழிநடாத்திக்கொண்டிருக்கும் நம் விண்ணகத் தந்தையின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத்திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று பொதுக்காலம் முப்பத்திரெண்டாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்.

வாழ்வில்லை, வழியில்லை, உதவிட யாருமில்லை என்ற அங்கலாய்ப்பிலும், மனவேதனையிலும் இருப்போருக்கு மாபெரும் ஆறுதலின் செய்தியாக இன்றைய இறைவார்த்தைகள் அமைந்துள்ளன. இறைவன் துன்பங்களை அனுபவிக்கும் மக்கள் சார்பாக நின்று செயலாற்றுகின்றார், உணவளிக்கின்றார், விடுதலை அளிக்கின்றார், குணமாக்குகின்றார், பாதுகாக்கின்றார், ஆதரிக்கின்றார், அன்பு செலுத்துகின்றார் என்பதே நமக்கு மகிழ்வு தரும் அச் செய்திகளாகும். இறைவனுடைய இம் மாபெரும் அருளிரக்கத்திற்காக நன்றி கூறிக்கொண்டு, நிபந்தனையற்ற விதத்தில் அவருடைய அன்பையும், இரக்கத்தையும் நமது முன்மாதிரிகையான வாழ்வால் மற்றவருக்கு எடுத்துரைக்கும் சாட்சிகளாய் வாழ இத்திருப்பலியில் அருள் கேட்டுச் செபிப்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**எல்லாத் தலைமுறையினரையும் இரக்கத்தோடு ஆட்சி அன்புத் தந்தையே இறைவா!**
எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரும் நிறை ஞானத்தோடும், விவேகத் தோடும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளவர்களை வழி நடாத்துவதற்கு வேண்டிய அருளை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்லும் தந்தையே இறைவா!**
இறந்து போன அனைத்து ஆன்மாக்களுக்கும் நித்திய இளைப்பாற்றியை அளித்திட வேண்டுமென்றும், எமது நாட்டில் ஏற்பட்ட போரில் இறந்து போன அனைவருக்கும் நித்திய இளைப்பாற்றியை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அனாதைப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும் ஆதரிக்கும் அன்புத் தந்தையே இறைவா!**
உலக நாடு முழுவதிலும் பெற்றோரை இழந்து வாடும் குழந்தைகள், இன்னும் உதவியின்றி பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வாழும் ஏழைக் கைம்பெண்கள் ஆகியோரை உமது இரக்கத்தால் பாதுகாத்து வழி நடாத்திட வேண்டுமென்றும், நாங்கள் ஒவ்வொருவரும் கருணையும, இரக்கமும், அன்பும் உள்ளவர்களாகவும், நிபந்தனையின்றி அன்புப்பணிக்காக எம்மையே அர்ப்பணிக்கும் நல்லுள்ளத்தை எமக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்யும் தந்தையே!**
எம் பங்கை வழிநடத்தி இறந்த பங்கு குருக்களுக்காவும், பங்குமக்களுக்காகவும் மன்றாடுகிறோம். உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார் என்பதிற்கினங்க உம்மீது நம்பிக்கை கொண்டு வாழ்ந்து இறந்த ஆன்மாக்கள் அனைத்தும் தங்களுடைய பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்களை நிறைவாக ஆசிர்வதித்து உம் வானக வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அன்பின் இறைவா,**
யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக சிறப்பாக மன்றாடுகிறோம். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்கள் வேதனை குறைந்து உம் தெய்வீக விருந்தில் பங்குபெற அவர்களை ஆசிர்வதித்து உம்மிடம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**
நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தூயவரான அன்புத் தந்தையே இறைவா!**

இன்று எமது சமூகத்திலே வீணான விவாதங்களாலும், குழப்பங்களாலும், தவறான போதனைகளாலும், பிடிவாதத்தாலும், உறவை முறித்து, விசுவாசத்தை மறந்து பாதை மாறிச் செல்லும் அனைவர்மீதும் மனமிரங்கி உமது வழியில் செல்ல அவர்களை வழிப்படுத்தியருள வேண்டுமென்றும், எமது இளைஞர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களது இளமைப் பருவத்தின் பாவங்களையும், குற்றங்களையும் நினையாது உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் அவர்கள் மேல் பொழிந்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.